S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி டிசம்பர் 19 * 2025 * மலர் -1 * இதழ்-201* VOL-1 * ISSUE-201 விலை ரூ.3 * பக்கம் -4

# 15 ஜோடிகளுக்கு இலவச திருமணத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைத்தார்!



**சென்னை,டிச.19**

பெண்கள் எதையும் சாதிக்கக் கூடியவர்கள். மனைவி சொன்னால் கேட்டுக்கொள்ள வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார். தனது வெற்றிக்குப் பின் தனது மனைவி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சென்னை கொளத்தூர் தொகுதியில் ரூ.15.25 கோடியில் கட்டப்பட்ட திருமண மாளிகையைத் திறந்து வைத்து அங்கு 15 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைகளை வழங்கினார்.

இந்த விழாவில் அவர் பேசியதாவது:–

கொளத்தூருக்கு வந்தால் எனக்கு ஒரு எனர்ஜி வந்துவிடும். உற்சாகம் வந்துவிடும். வேகம் வந்துவிடும். ஒரு புத்துணர்ச்சி வந்துவிடும். ஏராளமான திட்டங்களை இந்த தொகுதியில் நிறைவேற்றி இருக்கிறேன். இதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. அது மட்டுமல்லாது உங்களுக்கெல்லாம் பொறாமையும் இருக்கும்.

ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு 2 முறை செல்வேன். ஆனால் கொளத்தூருக்கு மட்டும் 10முறைவந்துவிடுவேன். இல்லாவிட்டால் அமைச்சர் சேகர்பாபு என்னை விடமாட்டார்.

என்னுடைய வெற்றிக்குப் பின் இருப்பது என்னுடைய மனைவி தான். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் இருப்பது பெண். நான் மிசாவில் இருந்த போது என் மனைவி கோபித்துக்கொண்டு ஏதாவது ஒரு முடிவு எடுத்திருந்தால் என் நிலைமை என்னவாகியிருக்கும்? எவ்வளவு கொடுமைகள் வந்தபோதும் அவர் என்னை ஊக்கப்படுத்தியதால்தான் நான் இந்த நிலைக்கு வந்திருக்கிறேன். ஓராண்டு காலம் நான் மிசாவில் இருந்த போது பொறுமையாக இருந்தவர் என் மனைவி. பெண்கள்முன்னேறினால் அந்தக் குடும்பம் சிறக்கும். பெண்கள் நினைத்தால் எதையும் சாதிப்பார்கள். ஆகவே மனைவி சொன்னால் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

# கொங்கு மண்டலத்தை மறுவடிவமைக்கும் தி.மு.க.வின் மேற்குக் கை : செந்தில் பாலாஜி



அதிமுக–பாஜக கூட்டணியை பின்னுக்கு தள்ளும் புதிய அரசியல் சமநிலை கொங்கு மண்டலம் – பாரம்பரியத்தை மாற்றிய புது அரசியல் யுகம் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதி அல்லது "கொங்கு மண்டலம்" என அழைக்கப்படும் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல், கிருஷ்ண



கிரி, தர்மபுரி, நீலகிரி மாவட்டங்கள் எப்போதுமே அதிமுகவின் வலுவான சமூக அடிப்படையை கொண்ட பகுதிகள். 2011 மற்றும் 2016 சட்டமன்றத் தேர்தல்களில் இதே மண்டலத்தில் அதிமுக வெற்றிகளைப் பெரிதும் பெற்றது. 2021 தேர்தலிலும் மேற்குத் தமிழ்நாட்டில் உள்ள 38 தொகுதிகளில் 26 இடங்களில் அதிமுக முன்னிலை பெற்றது, எனவே இப்பகுதிஅதிமுககோட்டை என அரசியல் ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டது.

ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளில் அந்த அரசியல் சமநிலையில் மாற்றம் நிகழ்ந்துள்ளது — அதற்கான முக்கிய காரணியாக கரூரை அடிப்படையாகக் கொண்ட செந்தில் பாலாஜி பெயர் மேலோங்குகிறது. செந்தில் பாலாஜி – கரூரிலிருந்து கொங்கு வரை விரிந்த தலைமையியல் வி. செந்தில் பாலாஜி, ஒரு தன்னிறைவான மாவட்டத் தலைவர் என்ற வரையறையை தாண்டி, தற்போது மேற்குத் தமிழ்நாட்டு அரசியலுக்கே புதிய வடிவமைப்பை அளிக்கும் தலைவராகக் கருதப்படுகிறார். அவரின் அரசியல் பயணம் அதிமுகவிலிருந்தே தொடங்கியதாலும், திமுகவில் இணைந்த 2018க்கு பின் அவரது தாக்கம் இரு முகாம்களையும் தெளிவாகப் பாதித்ததாக பல அரசியல் விமர்சனங்கள் விளக்குகின்றன. கரூரில் அவர் உருவாக்கிய வலிமையான அமைப்பு, தேர்தல் மேலாண்மை திறன், உள்ளூர் சமூக தலைவர்களுடன் இணைப்பு ஆகியவை திமுகவுக்கு எதிர்பாராத வலிமையை கொடுத்து விட்டன. 2021 சட்டமன்றத் தேர்தலில் கரூர்லோக்சபாவரையிலான ஆறு தொகுதிகளில் ஐந்து இடங்களை திமுக கூட்டணி கைப்பற்றியது — இது வெறும் வாக்கு மாற்றமல்ல, கொங்கு மண்டலத்தில் திமுகவின் அடித்தளத்தைஉறுதிப்படுத்திய திருப்புமுனை என அரசியல் ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர்: திமுக எழுச்சியின் புதிய அடையாளங்கள் திமுகவின் மேற்குத் தமிழ்நாட்டிலான வளர்ச்சியில் செந்தில் பாலாஜி பங்கு முக்கியமானதாகக் காணப்படுகிறது.

2022 கோயம்புத்தூர் மாநகராட்சி தேர்தலில் திமுக கூட்டணி 100 வார்டுகளில் 96



இடங்களைப்பெற்றது; இது மேற்குத் தமிழ்நாட்டில் அதிமுக–பாஜக ஆதிக்கம் குறைவதற்கான முதல் தீவிர அறிகுறியாகவே விவரிக்கப்படுகிறது.

அத்துடன், 2024 லோக்சபா தேர்தலில் திமுக கோயம்புத்தூர் தொகுதியை நேரடியாக போட்டியிடச் அந்த முடிவு திமுகவுக்கு அரசியல் ரீதியாகப் பெரும் பலன் நல்கியது – பாஜக மாநிலத் தலைவர்



கே. அண்ணாமலை மீது திமுக வேட்பாளர் 1.14 லட்சம்வாக்குகள்வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றி வெறும் தொகுதி முடிவல்ல – கொங்குமண்டலமுழுவதும் "திமுகவும் மேற்கும் இணையும் புதிய சமநிலை" உருவாகிக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்திய தெளிவான சைகை எனப் பார்க்கப்பட்டது.அதிமுக–பாஜக கூட்டணியின் தி ண்டாட்டங்கள் 2021 தேர்தலுக்குப் பின்னர் அதிமுக – பாஜக கூட்டணியில் மேற்குத்தமிழ்நாட்டை நிலைநிறுத்தும் முயற்சிகள் பல நடந்தாலும், அவை வாக்கு வித்தியாசங்களைக் குறைக்கவில்லை. பாஜக மேற்குத் தமிழ்நாட்டை தன் வளர்ச்சி மண்டலமாக மாற்ற முயன்றது உண்மைதான்,

ஆனால் அந்த முயற்சியில் கட்சிக்குள் தலைமைப் போட்டிகள், கூட்டணிக்குள் சீட் ஒதுக்கீடு விவகாரங்கள், சமூகஅடிப்படையிலானசமநிலைகள் ஆகியவை பல தடைகளை ஏற்படுத்தின. மேலும், திமுகவின் அமைச்சர்கள் மேற்குத் தமிழ்நாட்டில் சமூக ஆதரவை திட்டமிட்ட வகையில் நிலைநிறுத்த, அதிமுகவின் பழைய அமைப்பு மெலிந்தது. செந்தில் பாலாஜி இதனைச் சாதகமாக பயன்படுத்தி, திமுக அமைப்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகளைமுன்னெடுத்தார். 2026



தேர்தலை நோக்கும் புதிய மையப்புள்ளி 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திமுக, மேற்குத்தமிழ்நாட்டு பொறுப்பினை மீண்டும் செந்தில் பாலாஜிக்கு வழங்கியுள்ளது என்பது திமுக உள்துறை வட்டாரங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் தற்போது மேற்குத் தமிழ்நாட்டின் மாவட்டங்களில் — உறுப்பினர் சேர்க்கை, அமைப்புச் சீரமைப்பு, சமூக தலைவர்களுடன் அணுக்கம், வாக்கு அடிப்படை விரிவாக்கம் ஆகிய பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

அதிமுகவின் எஸ்.பி. வேலுமணி, கே.ஏ. செங்கோட்டையன், பாஜகவின் அண்ணாமலை ஆகியோரும் இதே மண்டலத்தை தங்கள் செயல்பாடுகளுக்கான தளமாக ஏற்றுள்ளதால், 2026 தேர்தல் மேற்குத் தமிழ்நாட்டில் "செந்தில் பாலாஜி vs அதிமுக–பாஜகதலைவர்கள்" என்ற வடிவத்தில் நேரடி அரசியல் மோதலாக மாறும் வாய்ப்பு அதிகம் என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அரசியல்



சமநிலையின் புதிய முகம் செந்தில் பாலாஜி உருவாக்கும் அமைப்பு, வாக்கு ஒத்துழைப்பு, மற்றும் சமூகத் தள வளர்ச்சி — இவை மூன்றும் தற்போது திமுகவின் மேற்குத் தலைமையின் மூலத்துணைகளாக மாறியுள்ளன. இதனால், கொங்கு மண்டலத்தில் திமுக ஒருபோதும் அடைய முடியாது என்று கருதப்பட்ட நிலையைத் தாண்டி, "அதிமுக–பாஜக கோட்டைக்குள் திமுக நுழைந்திருப்பது" என மதிப்பிடப்படுகிறது.

இன்று "செந்தில் பாலாஜியின் அரசியல் பலத்தால் பின்னுக்கு தள்ளப்படும் அதிமுக–பாஜக" என்ற வாசகம் வெறும் தலைப்பு அல்ல — மேற்குத் தமிழ்நாட்டில் நடைபெறும் அரசியல் மாற்றத்தின் ஆழமான உண்மை. அது ஒருவரின் தாக்கத்திற்கும் மீறி — ஒரு மண்டல அரசியல் மறுவடிவமைப்பின் அறிகுறியாக மதிக்கப்பட வேண்டியது.



மணலி மண்டலம், வார்டு20க்குட்பட்ட மணலி ஏரியில் ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புப் பணிகளின் காரணமாக தற்போது பெய்த மழையினால் ஏரியில் நீர் நிரம்பி ரம்மியமாக காட்சியளிக்கிறது.



கடையநல்லூர் சரக 11ஆம் வகுப்பு பயிர் மாணவ மாணவிகளுக்கு இலவசம் மிதிவண்டி நகர் மன்ற தலைவர் வழங்கினார் தென்காசிடிசம்பர் 16தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சரக பகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்குஇலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியை கடையநல்லூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் துவக்கி வைத்தார்.

# திருவெண்ணெய்நல்லூரில் வழக்கறிஞர் வீட்டின் கதவை உடைத்து 4பவுன் நகை பணம், 3 1/2 கிலோ வெள்ளி கொள்ளை!

திருவெண்ணெய்நல்லூர், டிச.19

திருவெண்ணெய்நல்லூரில் வழக்கறிஞர் வீட்டின் கதவை உடைத்து 4பவுன் நகை மற்றும் 3 1/2 கிலோ வெள்ளி நகைகள் திருட்டு சம்பவம் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் கிழக்குத் தெருவை சேர்ந்த வீரபத்திரன் மகன் சுரேஷ்பாபு(50) இவர் வழக்கறிஞர். இவருக்கு இரண்டு வீடுகள் உள்ளது. கிழக்கு தெருவில் ஒரு வீடும், மேற்கு தெருவில் ஒரு வீடும் உள்ளது. இவர் தற்சமயம் புதியதாக கட்டப்பட்ட வீட்டில் கடந்த ஒரு மாத காலமாக குடியிருந்து வருகிறார். கிழக்கு தெருவில் உள்ள பழைய வீட்டில் உள்ள அனைத்து பொருட்களும் அங்கேயே இருந்தது. அந்த வீட்டிற்கு இவரும் இவரது மனைவியும் மகாலட்சுமியும் அடிக்கடி சென்று பார்த்து வந்தனர். இந்நிலையில் கடந்த 11.12.2025 தேதி காலை 6:30 மணியளவில் பழைய வீட்டின் சைடு கதவு திறக்கபட்டுள்ளது என்று பக்கத்து வீட்டு நபர் கைபேசியில் தொடர்புக் கொண்டு பேசினார். அங்கு சென்று பார்த்தபோது கதவு திறக்கப்பட்டு வீட்டில் இருந்த அனைத்து பீரோக்களும் உடைக்கபட்டு பீரோகளில் இருந்த தங்க நகைகள் 1 தோடு கம்மல், 15 ஜோடி தங்க மூக்குத்தி, மோதிரம், தாலி குண்டு நாணல் உள்ளிட்ட 4 பவுன் நகைகளும்

30 ஜோடி வெள்ளி கொலுசு, வெள்ளி சாமி சிலைகள், வெள்ளி டம்பளர், சொம்புமற்றும்வெள்ளிகுங்குமசிமிழ்கள் 20ம், வெள்ளி செயின், வெள்ளி கை செயின் உள்ளிட்ட 3 1/2 கிலோ வெள்ளி நகைகள் மற்றும் 10,000 ஆயிரம் பணம் ஆகியவைதிருடுபோய் இருந்தது.யாரோ மர்ம நபர்களை திருடி சென்றுள்ளனர். இது குறித்து வழக்கறிஞர்சுரேஷ்பாபுதிருவெண்ணெய்நல்லூர் போலீசில் புகார் செய்தார். புகாரின் பேரில் திருவெண்ணெய்நல்லூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் விஜயகுமார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றார்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட தொப்பம்பட்டி ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாகம் எண் 106 ,107 ,108 ,109 நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவருமான செந்தில்குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் தனசேகர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சன் பாலு, கலந்துகொண்டு மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு கழகப் பணிகள் வெற்றிக்கான ஆலோசனைகளையும் வழங்கினர் கூட்டத்தில் பாகம் முகவர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் தி.மு.க. தொண்டர்கள் பெருந்திரளராக கலந்து கொண்டனர்.

# கொண்டசமுத்திரபாளையம் கிராமத்தில் வீட்டின் முன்பு இருந்த சி.சி.டி.வி.கேமராவை உடைத்தவர் கைது!

திருவெண்ணெய்நல்லூர், டிச.19

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள கொண்டசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த செந்தில் ஜெயந்தி(35) இவரின் வீட்டின்முன்பு சிசிடி கேமரா வைத்துள்ளனர். இதே ஊரில் ஆறுமுகம் மகன் சிலம்பரசன்(28) என்பவரும் வசித்து வருகின்றார். இந்த வீட்டின் முன்பு இரண்டு நாட்களுக்கு முன்பு சிலம்பரசன் உறவினர் அய்யாக்கண்ணு என்பவரும்



இதே ஊரை சேர்ந்த இளையராஜா என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு தள்ளு முள்ளு ஏற்பட்டது. இந்தப் பிரச்சினை சிசிடி கேமராவில் பதிவாகி உள்ளது. இந்தப் பிரச்சினைகள் சிசிடி கேமராவில் பதிவாகி உள்ளதா என கேட்டு சென்ற சிலம்பரசன் இரவில்

சிசிடி கேமராவை உடைத்துள்ளார். காலையில் ஏன் சிசிடி கேமராவை உடைத்தாய் என்று ஜெயந்தி கேட்ட போது ஜெயந்தியை திட்டி மிரட்டல் விடுத்துள்ளார். இதுகுறித்து ஜெயந்தி திருவெண்ணெய்நல்லூர் போலீசில் புகார் செய்தார். புகாரின் பேரில் திருவெண்ணைநல்லூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அன்பழகன் வழக்கு பதிவு செய்து சிலம்பரசனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆட்டோ ஓட்டுநரின் மனைவிக்கு ரூ.1.63 கோடி கட்ட நோட்டீஸ்!

## தொடரும் ஜி.எஸ்.டி வரி மோசடி!!

வாணியம்பாடி, டிச.19

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நேதாஜி நகர் பகுதியை சேர்ந்த ஆட்டோ ஓட்டுனர் முஹம்மத் பாஷா. இவரது மனைவி ஷாஹிதா. இவர் தமிழக அரசு வழங்கும் மகளிர் உரிமை தொகை வந்துள்ளதா என வங்கி கணக்கில் பார்க்கச் சென்ற போது மகளிர் உரிமைத் தொகை வரவில்லை எனவும் அப்போது வங்கி ஊழியர் ஒருவர் ஆதார் எண்ணை இணைக்க வேண்டும் என்று தெரிவித்த தன் பேரில் ஆதார் எண்ணை இணைத்த போது வங்கி



மேலாளர் ஷாஹிதாவை அழைத்து உங்கள் பெயரில் சென்னை பெரிமேடு பகுதியில் இயங்கி வரும் நிறுவனத்தின் பெயரில் ரூபாய் 1 கோடி 63 லட்சம் வரி பாக்கி உள்ளதாகவும் அதனை செலுத்தும் படி நோட்டீஸ் வந்துள்ளது என்று கூறியுள்ளார். தகவல் கேட்டு அதிர்ச்சி அடைந்த ஷாஹிதா இது குறித்து அவரது கணவர் முஹம்மத் பாஷாவிடம் தெரிவித்த நிலையில் தாங்கள் ஏமாற்றபட்டதை உணர்ந்து ஜி.எஸ்.டி மோசடி குறித்து வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் இது குறித்து புகார் அளிக்க சென்ற போது அங்கே காவல் துறையினர் சம்மந்தப்பட்ட குற்றம் மீதான நடவடிக்கைக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளிக்க அறிவுறுத்தி அனுப்பி வைத்தனர். ஆட்டோ ஓட்டுநரின் மனைவிக்கு ரூபாய் 1 கோடி 63 லட்சம் வரி பாக்கி நோட்டீஸ் அனுப்ப பட்ட விவகாரம் ஏழை எளிய கூலி தொழிலாளர்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.



வாணியம்பாடி அருகே தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் முறைகேடாக விநியோகிக்கப்பட்ட யுரியா மூட்டைகள். விவசாய சங்கத்தினர் வேளாண் சங்க அதிகாரிகளை முற்றுகையிட்டு வாக்குவாதம்.



கொல்லப்பள்ளிகிராமத்தில்அமைந்திருக்கும்அருள்மிகு ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத அருள்முருகன் திருக்கோவிலுக்கு நித உதவி வழங்கிய காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் எல். சுப்பிரமணியன் அவர்களுக்கு விழாக்குழுவினர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

# மது பாட்டில் பதுக்கி விற்றவர் கைது!

கடத்தூர். டிச19

தர்மபுரி மாவட்டம், கடத்தூர் காவல் நிலையத்துக்கு உட்பட்ட ஒடசல்பட்டி பகுதி சேர்ந்த , ராஜமாணிக்கம் மகன் சக்திவேல் (28)

தமிழக அரசு மது பாட்டிலைப் பதுக்கி, கூடுதல் விலைக்கு விற்றதாக கடத்தூர் போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து தகவலின் விரைந்து சென்ற காவல் உதவி ஆய்வாளர் நவீன் தலைமையிலான போலீசார் ஆய்வு செய்தனர். அப்போது மதுபாட்டில் பதுக்கி கூடுதல் விலைக்கு விற்றது தெரியவந்தது .

அதனால் அவரை கைது செய்து அவர் மீது வழக்கு பதிவு செய்து அவரிடமிருந்து, 26 மது பாட்டிலை பறிமுதல் செய்து பாப்பிரெட்டிப்பட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி அரூர் கிளைசிறையில் அடைத்தனர்.

# ‘லோலாபலூசா இந்தியா 2026’ இசை நிகழ்ச்சியின் சுவாரஸ்யங்களை அறிந்து கொள்ள அழைக்கும் ஏர்பிஎன்பி!



கோவை , டிச. 19

சுற்றுலா பயணிகளுக்கு வித்தியாசமான அனுபவங்களை வழங்கி வரும் ஏர்பிஎன்பி தற்போது மும்பையில் உள்ள மகாலட்சுமி ரேஸ்கோர்சில் ஜனவரி 24, 25ல் நடக்கும் சர்வதேச இசை கலைஞர்கள் பங்கேற்கும் ‘லோலாபலூசா இந்தியா 2026’ இசை நிகழ்ச்சியை காண சுற்றுலா பயணிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.இது இந்தியாவில் ஏர்பிஎன்பிக்கு ஒரு உற்சாகமான புதிய அத்தியாயத்தில் நுழைவதைக் குறிக்கிறது. மேலும், பயணம், கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றின் மூலம் மக்களை இணைக்கும் இந்நிறுவனம் தற்போது இசைத் துறையிலும் கால் பதித்துள்ளது. இதற்கான முன் பதிவு துவங்கி உள்ள நிலையில், இதன் டிக்கெட் விலை ரூ. 5850 ஆகும். முதலில் வருபவருக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் இது உறுதி செய்யப்படும். பார்வையாளர்கள் தங்கள் சொந்த ஊரியில் இருந்து மும்பைக்கும் அங்கிருந்து சொந்த ஊருக்கும் தங்கள் சொந்த செலவிலேயே வந்து போக வேண்டும்.இது நிகழ்ச்சிகளை வெறும் பார்வையாளர்களாக மட்டுமல்லாமல், அவற்றுடன் ஒரு நெருங்கி தொடர்பை ஏற்படுத்துகிறது.24ந்தேதி நடைபெறும் இந்தியாவின் புகழ்பெற்ற இசையமைப்பாளர் மற்றும் தயாரிப்பாளர் இரட்டையர்களான ஒஜளப்எப் மற்றும் சவேராவுடன் மேடைக்குப் பின்னால் சென்று, அவர்கள் நிகழ்ச்சிக்கு எவ்வாறு தயாராகிறார்கள் மற்றும் தங்கள் குழுவினருடன் அவர்கள் எவ்வாறு உரையாடுவார்கள். மேலும் இந்தியாவின் மிகவும் புதுமையான கலைஞர்களான அவர்கள் இருவரும், ஸ்டுடியோ முதல் மேடை வரை இசையை எப்படி வெளிப்படுத்துகிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கான ஒரு அரிய வாய்ப்பாக இது இருக்கும்.



# சின்னசெவலை கிராமத்தில் என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவவடி கூட்டம்!

## முன்னாள் அமைச்சர் க.பொன்முடி எம்.எல்.ஏ பங்கேற்றார்!!

திருவெண்ணெய்நல்லூர், டிச.19

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள சின்னசெவலை கிராமத்தில்

என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி கூட்டத்தில் திமுக கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் கலந்து கொண்டு தேர்தல் பணிகளை எவ்வாறு செய்ய வேண்டும் என பேசினார்.

விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம் சின்னசெவலை ஊராட்சியில் பூத் எண் 275ல் என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருவெண்ணெய்நல்லூர் மேற்கு திமுக ஒன்றிய கழக செயலாளர் விசுவநாதன் தலைமை தாங்கினார். திருவெண்ணெய்நல்லூர் மத்திய ஒன்றிய செயலாளர் சடகோபன், ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஓம்சிவசக்திவேல்ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில்திமுககழகதுணைபொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் கலந்து கொண்டு தேர்தல் பணிகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்கினார்.

நிர்வாகிகள் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நிர்மல்ராஜ், ஒன்றிய கவுன்சிலர் ஏழுமலை, கிளை செயலாளர்கள் ராம்குமார், நடராஜன், பழனி நிர்வாகிகள் விசு, பாலு, கிருஷ்ணராஜ்,

பாலாஜி, கோகுல், விசுவநாதன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# 22 வினாடிகளில் 38 மாவட்டங்களின் பெயர்களை கூறி 3 வயது மாணவி உலகளவிய சாதனை!

போச்சம்பள்ளி, டிச.19

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் எம். ஜி.எம். பள்ளி செயல்பட்டு வருகிறது.

இந்த பள்ளியில் படித்து வரும் எல். கே.ஜி. மாணவி சினாமிகா (வயது3), திகிங்டம் வோர்ல்ட் ரிகார்டு அமைப்பின் கீழ் சாதனை மாணவிகளை இனம் கண்டு பல்வேறு ரிகார்டுகளை சாதனையுடன் நிரூபித்து சிறு குழந்தைகளுக்கு ஊக்குவிக்கும் வகையில் இந்த அமைப்பு செயல்பட்டு வருகிறது.

அதில் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களின் பெயர்களை அதிவேகமாக தங்கு தடையின்றி நான்கரைவயதுகுழந்தை28வினாடிகளில் கூறி சாதனை படைத்திருந்தார். அந்த சாதனையை முறிய

அடிக்கும் வகையில் எம்.ஜி. எம்., பள்ளி 3 வயது மாணவி சினாமிகா. 22 வினாடிகளில் 38 மாவட்டங்களின் பெயர்களை கூறி பழைய சாதனையை முறியடித்து புதிய சாதனை நிகழ்த்தியுள்ளார். இதற்கு எம்.ஜி.எம்., பள்ளி முதல்வர் செல்வராஜ், ராஜ், ஒருங்கிணைப்பாளர் மேனகா, பள்ளி ஆசிரியை கவிதா ஆகியோர் ஒன்றிணைந்து 3 வயது குழந்தைக்கு தி கிங்டம் வோர்ல்ட் ரிகார்டு பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவித்தனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடக்கிறது; கலெக்டர் தகவல்!

கள்ளக்குறிச்சி, டிச.19–

தனியார்துறை நிறுவனங்களும் தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள மனுதாரர்களும் நேரடியாக சந்திக்கும் சிறிய அளவிலான "வேலைவாய்ப்பு முகாம்" கள்ளக்குறிச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பாக ஒவ்வொரு மாதத்தின் மூன்றாம் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது.இன்று கள்ளக்குறிச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறும்.



இவ்வேலைவாய்ப்பு முகாமில் தமிழகத்தை சார்ந்த வங்கி, நிதி, வாகன உற்பத்தி, காப்பீடு சில்லரை விற்பனை துறையைசார்ந்தமுன்னணிநிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கான தேவையான பணியிடங்களை நிரப்ப உள்ளனர். இது ஒரு இலவசப்பணியே ஆகும். இம்முகாமிற்கு பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை, ஐடிஐ, டிப்ளமோ, பி.இ /பி.டெக், முடித்த ஆண், பெண் ஆகியோர் www.tnprivatejobs.tn.gov.in இணையதளத்தில் CANDI DATE LOGIN வழியாக தங்களைபதிவுசெய்துகொண்டு கலந்து கொள்ளலாம்.

இதன் மூலம் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பு பெறுபவர்களுக்கு அவர்களது வேலைவாய்ப்பு பதிவு ரத்து செய்யப்பட மாட்டாது.

எனவே தகுதியும் விருப்பும் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும், தனியார்த்துறை நிறுவனங்களும் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை கள்ளக்குறிச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறும் இவ்வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், இஆப, அவர்கள் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட அதிமுக தலைமை அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ப. மோகன் விருப்ப மனு அளித்தார்.

